செய்தி வெளியீடு எண் : 2308 நாள் : 20.12.2022

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (20.12.2022) சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் விளையாட்டு உபகரணங்கள், பொதுமக்களுக்கு மிக்ஸி, கிரைண்டர் மற்றும் எல்.பி.ஜி. எரிவாயு அடுப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சீறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்ட சிறுவனை சந்தித்து நலம் விசாரித்தார். இந்நிகழ்வின் போது அச்சிறுவனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு உதவிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் சிலம்பம் விளையாட்டிற்கு உபகரணங்கள் வேண்டி மனு அளித்திருந்த நபர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, இனமான பேராசிரியர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–114க்குட்பட்ட சி.என்.கே. சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 500 நபர்களுக்கு மிக்ஸி, கிரைண்டர் மற்றும் எல்.பி.ஜி. எரிவாயு அடுப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் திரு.எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.ஆர்.பி.எம். காமராஜ், திருமதி ரா. மங்கை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in